

கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலியான திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோயிலைச் சேர்ந்த இரண்டு பேரின் உடலுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர் கே.சந்திரசேகரன், நகரக் கழகச் செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தனி நிதிநிலை அறிக்கை – இரண்டு இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு என

# விவசாயிகள் நலனில் அக்கறையுள்ளவர் நம் முதல்வர்!

### திண்டிவனத்தில் வேளாண் இடு பொருட்களை வழங்கி – செஞ்சி மஸ்தான் எம்,எல்,ஏ, பேச்சு!

திண்டிவனம், அக்.1-

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துறை சார்பில் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டம் மற்றும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் உயிர்ம வேளாண்மை விழிப்பு ணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சி திண்டிவனத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்திஅனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சி யில் உயிர்ம வேளாண்மைவிழிப்புணர்வு கண்காட்சியினை திண்டிவனம் சார் ஆட்சியர் ஆகாஷ்



தொடங்கி வைத்தார்.

கண்காட்சியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு ரக நெல் விதைகள்,தோட்ட பயிர்கள்,இயற்கை உணவுக்கு தேவையான நவதானிய வகைகள், உள்ளிட்ட விவசாயம் சார்ந்த டிராக்டர், பவர் டில்லர் உள்ளிட்ட பொருட்கள் விவசாயிகளுக்காக காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கண்காட்சியினை பார்வையிட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற விவசாகள் பங்கேற்ற கருத்தரங்க விழாவில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை யாற்றி விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார்.

அப்போது நிகழ்ச்சி யில் பேசிய அவர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆட்சியில் பல்வேறு நெல் ரகங்கள் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுபயிர் செய்யப்பட்டு மகசூல் அதிகப் படுத்தப்பட்டது. மேலும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கிய கலைஞர் விவசாயிகள் வாங்கிய கடனையும் தள்ளுபடி செய்தார்.

கலைஞர் ஆட்சியில் இன்று ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டு வேளாண் துறைக்கு என தனி நிதி நிலை அறிக்கை உருவாக்கி இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பை வழங்கி விவசாயிகள் நலனில் ஒரு அக்கறை உள்ள முதலமைச்சராக திகழ்ந்து வருவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட துணை சேர்மன் ஷீலா தேவி சேரன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,மரக்காணம் துணைச் சேர்மன் பழனி, திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர் சதீஷ், தோட்டக்கலை துணை இயக்குனர் அன்பழகன், விதை ஆய்வு துணை இயக்குனர் சரவணன், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை துணை இயக்கு னர் சுமதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிரேமலதா, விதைச் சான்று மற்றும் உயிர் ம சான்று உதவி இயக்குனர் முனைவர் பாலசுப்பிரமணியம், செயலாளர் விழுப்புரம் விற்பனை குழு, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு விஜயகுமார், வல்லம் வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் மரக்காணம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆரோக்கிய ராஜ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாகதமிழ்நாடு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் முனைவர்கள் திருவரசன், துரைசாமி, லெனின் ஆகியோர் கலந்துகொண்டு இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து படகாட்சி மூலம்விளக்க உரை ஆற்றினர். வண்டி பாளையம் சீதாராமன் கலந்து கொண்டு விவசாய இயற்கை இடுபொருட்கள் தயாரிக்கும் முறை குறித்தும் விளக்கவுரை நிகழ்த்தினார்.

இதில் 400க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் உணவு உற்பத்தியாளர் நிறுவனங்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

வானூர் வேளாண்மை உதவி இயக்குனர் எத்திராஜ் நன்றி கூறினார்.

# ஆண்டிப்பட்டியில் ரேசன் கடை திறப்பு!

தேனி, அக். 1–

தேனிதெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் நேற்று முன்தினம் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ – மாணவிகளின் பயன்பாட்டிற்காக புதிய கட்டிடங்கள் திறப்பு விழா சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது.

ராஜதானி ஊராட்சியில் டி.அழகாபுரி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைக்கு ஏற்ப ரூ.33 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு நேற்று எம்.எல்.ஏ. மகாராஜன் வகுப்பறை கட்டிடங்களை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இதேபோல் ஜக்கம்மாள்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலம் கட்டப்பட்ட ரூ.12 லட்சம் மதிப்பிலான ரேஷன் கடையை எம்.எல்.ஏ. மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

மேலும் பொது மக்களுக்கு ரேஷன் பொருட்களான அரிசி, சீனி உள்ளிட்டவைகளை வழங்கி விற்பனையை தொடங்கி வைத்தார். கொத்தப்பட்டி கிராமத்தில் பள்ளிக் கல்வி பொது நூலகங்கள் சிறப்பு உதவி திட்டத்தில் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் பொது நூலகம் கட்டிடத்தை துவக்கி வைத்தார்.

இதேபோல் கோத்தலூத்து கிராமத்தில் ரூ.17.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை எம்.எல்.ஏ. மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் , பேரூர் செயலாளர் , மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரகாஷ், மற்றும் ஜெயபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், அய்யப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயக்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்டத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் பரப்புரையின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம், வெங்கம்பூர் கிராமம் வெற்றி கோனார் பாளையத்தைச் சேர்ந்த ரேவதி (வயது 52), ஆவுடையார் பாளையத்தைச் சேர்ந்த சதீஷ்குமார் (வயது 33), பவானி வட்டம் ஜம்பை, பழனி யாண்டவர் கோயில் பகுதியைச் சேர்ந்த மோகன், (வயது 18) ஆகியோர் கூட்ட நெரிசலில் பலியாயினர். அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, பவானி வட்டாச்சியர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் வழங்கினார்கள்.




திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ம.அன்பழகன், இந்திரா பெரியார்தாசன், ஆர்.சுதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### என்.கௌதமன் பங்கேற்பு! நாகையில்

# தமிழ்நாட்டில் 414 வட்டாரங்களில் 500 வெற்றிப் பள்ளிகள் திட்டம் !

### அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

நாகை, அக்.1-

நாகை மாவட்டம் நாகை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வெற்றிப் பள்ளிகள் (VETRI [Vibrant Education Targeting Reputed Institutions] Palligal) திட்டத்தினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டு முதலமைச்சரின் சீரிய தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தரமாக கல்வியை உயர்கல்விக்காளப் பயிற்சியும் வழங்குவதில் கொண்டுள்ள அக்கறையும், அர்ப்பணிப்பையும் காட்டுகிறது.. சட்ட மன்றத்தில் நிதியமைச்சர் தமிழ்நாடெங்கும் உள்ள 414 வட்டாரங்களில் 500 வெற்றிப் பள்ளிகள் நிறுவப்பட்டும் அறிவித்ததைத் தொடர்ந்து 29.07.2025 அன்று வெற்றிப் பள்ளிகளுக்கான அரசாணை வெளியிடப்பட்டது

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்கள், இந்தியா மட்டுமல்ல உலகின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் உயர் படிப்பை தொடர்வதற்கு, அவர்கள் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாநிலத்தின் 38 மாவட்டங்களின் ஒவ்வொரு வட்டாரத்திலும் வெற்றிப் பள்ளிகள் திட்டம் (VETRI [Vibrant Education Targeting Reputed Institutions) Palligal) கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி நாகையில் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாதிரிப் பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா. சுதன், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டம் நாகை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வெற்றிப் பள்ளிகள் திட்டத்தினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து பேசுகையில்,

உயர்கல்வி நிறுவனங்களில் நம் மாணவர்கள் சேர்வதற்காக முதல் கட்டமாக மாவட்டம் தோறும் மாதிரி பள்ளிகள் தொடங்கப்பட்டன. அதன் தொடரச்சியாக வட்டாரம் தேறும் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அதன்படி ஒவ்வொரு வட்டாரத்தில ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வெற்றிப் பள்ளியாக செயல்படும் அதில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வார இறுதியில் பயிற்சிகள் வழங்கப்படும். கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட பாட நிபுணர்கள் இப்பயிற்சியினை வழங்குவார்கள். இப்பயிற்சி வருப்புகளுக்கு மாதிரி பள்ளிகள் மூலம் பயிற்சித் தாள்கள், பாடங்களை விளக்கும் காணொளிகள், இணைய வழியில் பயிற்சித் தேர்வுகள் ஆகியவை வழங்கப்படும்.

ஒவ்வொரு பள்ளியிலும் பாடங்களைத் திரும்பட வழங்குவதற்கென ஸ்மார்ட் போரடுகள் இணைய வசதி ஆகியயை நிறுவப்படும். வெற்றிப் பள்ளிகள் மூலம் கிராமப்புறர் மாணவர்கள் நன்கு திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட பயிற்சியைத் தங்கள் வட்டாரத்திலேயே பெறும் வாய்ப்பும், மாணவர்கள JEE, NEET, CUET, CLAT தயாராளும் வாய்ப்பும் கிடைக்கிறது.

இந்த ஆண்டு முதல் கட்டமாக 236 வட்டாரங்களிலுள்ள 309 பள்ளிகள் வெற்றிப் பள்ளிகாகச் செயல்படும் என பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி பேசினார்.

முன்னதாக நாகப்பட்டினம் நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய தொழில் நுட்ப கணினி மையத்தினை அமைச்சர் அன்பின் மகேஸ்வரி திறந்து வைத்து, நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணர்களிடம் கலந்துரையாடினார்.


நிகழ்ச்சியில் நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்றத் தலைவருமான இரா.மாரிமுத்து நாகை நகர் மன்ற துணைத்தலைவரும், நாகூர் நகர கழக செயலாளருமான எம்.ஆர். செந்தில் குமார், தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகா. குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, குலோத்துடன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.ஏ. கணேசன், நாகை நகர துணைச் செயலாளார் வெற்றிலைக் கடை சிவா, நகர இளைஞரணி எஸ்.சௌந்தரராஜன், பயாஸ், நாகை நகரக் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் லதா, தொடக்க கல்வி இயக்குநர் நரேஷ், மற்றும் பள்ளிக் கல்வித் துறை உயர் அதிகாரிகள் தலைமை ஆசிரி யர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முத்துப்பேட்டை கோவிலூர் பெரியநாயகி மகளிர் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித்திட்ட துவக்க விழாவை துவக்கி வைத்து மாவட்ட தொடர்பு அலுவலர் சக்கரபாணி பேசினார். மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், பேரூராட்சி தலைவர் மும்தாஜ் நவாஸ்கான், தலைமை ஆசிரியை ராணி மற்றும் கல்வி ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.என். சுப்பிரமணியன்
### அக்டோபர் 1 (2015)



1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.

25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**